பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 தை 12 ஞாயிற்றுக்கிழமை (26-01-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 60

29-01-1992

## அரசமைப்பின் மூலம்.........

# தமிழருக்கு கூடுதல் அதிகாரம்

# சிங்கள மக்கள் பேராதரவு!

## கருத்துக் கணிப்புத் தரும் தகவல்

லண்டன், ஜனவரி 26

சிறுபான்மை மக்களுக்குக் கூடுதல் அதிகாரம் வழங்கும் வகையில் அரசமைப்பு திருத்தப்பட வேண்டும் என்பதற்கு சிங்கள மக்கள் பேராதரவு தெரிவித்திருக்கின்றனர்.

தென்னிலங்கை மக்களில் மூன்றில் இரண்டு பகுதியினர் — 67 சதவீதத்தினர் — அதிகாரப் பரவலாக்கலை முற்றும் முழுதாக வரவேற்றிருக்கிறார்கள்.

தென்னிலங்கை மக்கள் மத்தியில் பிரபல சிங்கள வார இதழ் ஒன்று நடத்திய கருத்துக் கணிப்பிலிருந்து இத்தகவல்கள் தெரியவந்திருக்கின்றன.

''ராவய'' பத்திரிகை இந்தக் கருத்துக் கணிப்பை நடத்தியது.

அரசியல் விழிப்புணர்ச்சி மிக்க மக்கள் மத்தியில் எழுந்தமானமாக நடத்தப்பட்ட இந்தக் கருத்துக் கணிப்பீட்டின் போது 3 ஆயிரத்து 334 பேரின் கருத்துகள் அறியப்பட்டன.

சமஷ்டி ஆட்சிமுறை ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதை இருபது வீதமானோரும் —

சிறுபான்மையானோர் தனியாகப் பிரிந்துபோக விரும்பினால் அதற்கு அனுமதிக்க வேண்டும் என்பதை மூன்று வீதமானோரும் வரவேற்றனர்.

இருபத்தியெட்டு வீதமானோர் நாட்டைப் பிரிப்பதற்கு அனுமதிக்கக் கூடாது என்று தெரிவித்துள்ளனர்.

(உ-10)

## மட்டக்களப்பு பகுதிகளில் ராணுவ கெடுபிடி மோசம்

### கடந்த ஒரு வாரத்தில் 10 தமிழர் பலி!

யாழ்ப்பாணம், ஜன. 26

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர்கள் மீதான இராணுவத்தினரின் கெடுபிடிகள் கடந்த ஒரு வாரத்தில் மேலும் மோசமடைந்துள்ளன.

கடந்த ஒரு வாரத்தில் மட்டும் பத்துக்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் படையினரால் கொல்லப்பட்டுள்ளனர் என்றும், 20க்கும் மேற்பட்டவர்கள் கடுமையாகத் தாக்கப்பட்டு, முகாம்களுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த செவ்வாயன்று காஞ்சிரங்குடாவில் 4 தமிழ் மக்கள் கொலையுண்டனர் என்றும், புதனன்று முருகுப்பிட்டி என்ற இடத்தில் 3 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

முருகுப்பிட்டியில் கொலையுண்ட 3 தமிழர்களின் சடலங்களைப் படையினர் தமது முகாமுக்கு இழுத்துச் சென்றனர் எனவும் —

இறந்தவர்களின் உரித்தானவர்கள் சடலங்களைக் கையேற்க முகாம் சென்றசமயம், அவர்களை விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் என்று கூறி முகாமில் தடுத்து வைத்துள்ளனர் எனவும் அறியவருகிறது. [ஒ]

## சித்தாண்டியில் 3 தமிழர்கள் படுகாயம்

யாழ்ப்பாணம், ஜன. 26

மட்டக்களப்பு, சித்தாண்டியில் கடந்த செவ்வாயன்று படையினர் பதுங்கி இருந்து தாக்கியதில் 3 தமிழ் மக்கள் படுகாயமடைந்தனர் என்றும் காயமடைந்த இந்த மூவரையும் படையினர் தமது முகாமுக்கு இழுத்துச் சென்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேசமயம், அரசடித்தீவுப் பகுதியில் பதுங்கியிருந்த படையினர் இரு தமிழ் இளைஞர்களைக் கைது செய்து, முகாம் கொண்டு சென்றனர் என்றும் அறியவருகிறது.

## இலங்கை-இந்திய ஒப்பந்தம்; அவசியம் என்கிறார் பிரட்மன்

புதுடில்லி, ஜன. 26

''1987 இல் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவும் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியும் செய்துகொண்ட இலங்கை—இந்திய ஒப்பந்தம் இலங்கையைப் பொறுத்தவரை மிக அத்தியாவசியமானதாகும்.''

ஜனாதிபதி பிரேமதாஸாவின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் இவ்வாறு கருத்து வெளியிட்டதாக பி.ரி. ஐ. செய்தி ஸ்தாபனத்தை மேற்கோள் காட்டி இந்தியப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

இலங்கை—இந்திய கூட்டு ஆணைக்குழு அமைக்கப்பட்டதன் மூலம் இரு நாடுகளுக்குமிடையிலான தொடர்புகள் வலுப்பட்டிருக்கின்றன என்று இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் கூறியிருப்பதையும் அந்தச் செய்தி சுட்டிக்காட்டியிருக்கிறது. [உ-10]

## செஞ்சிலுவைப் பிரதிநிதிகள் தீவுப்பகுதிக்குச் சென்றனர்

நெடுந்தீவு தவிர்ந்த ஏனைய தீவுகளில் படையினரிடம் சிக்கியுள்ள மக்களை நேரில் சந்தித்து அவர்களின் தேவைகளை அறிந்துகொள்வதற்காக செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழுப் பிரதிநிதிகள் நேற்று அங்கு புறப்பட்டுச் சென்றனர்.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் யாழ். பிரிவுத் தலைவர் திரு. கிளாவ்டியோவும் வேறு இரு பிரதிநிதிகளும் பருத்தித்துறையிலிருந்து கப்பல் மூலம் அங்கு சென்றுள்ளனர். [...]

## முச்சந்தி முரளி



மக்கள் விரும்பினாலும் [illegible]

## தபால் பொதிகள் வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம், ஜன. 26

'குமாரி' கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ள தபால் பொதிகள் நேற்று மாலை யாழ். பிரதம தபாலகத்திற்கு எடுத்து வரப்பட்டன.

மொத்தமுள்ள 408 பொதிகளில் யாழ். பிரதம தபாலகத்துக்குரிய 367 பொதிகளே நேற்று எடுத்துவரப்பட்டன.

நாளை முதல் அவை விநியோகிக்கப்படும் எனத் தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன. [ஒ-5]

## ஜனாதிபதி ஆட்சி முறைக்கு மக்கள் ஆதரவு இல்லை!

ஸ்ரீலங்காவில் தற்போது நடைமுறையில் இருக்கும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறைக்கு மக்கள் ஆதரவு சற்றும் இல்லை.

''ராவய'' பத்திரிகை நடத்திய கருத்துக் கணக்கெடுப்பில் இருந்து இது தெரியவந்திருக்கிறது.

அபிப்பிராயம் வெளியிட்டவர்களில் ஒரு சதவீதமானோரே ஜனாதிபதி ஆட்சி முறையை வரவேற்றிருக்கிறார்கள்.

நாடாளுமன்ற ஆட்சி முறையை 34 வீதத்தினர் வரவேற்றுள்ளனர்.

41 வீதமானோர் நாடாளுமன்றத்துக்கு பதில் சொல்லக்கூடிய ஜனாதிபதி ஆட்சி முறை ஏற்படுத்தப்பட வேண்டும் என விருப்பம் தெரிவித்திருக்கின்றனர். [உ-10]

## தென்னிலங்கை மக்கள் பிரேமாவுக்கு ஆதரவு!

### லலித்துக்குப் பின்னால் சிறிமா

லண்டன், ஜன. 26

தென்னிலங்கையில் தொடர்ந்து நம்பிக்கைக்குரிய தலைவர் என்று ஜனாதிபதி பிரேமதாஸாவையே பெரும்பாலான மக்கள் கருதுகின்றனர்.

''ராவய'' பத்திரிகை நடத்திய கருத்துக் கணிப்பீட்டில் இந்தத் தகவல் வெளியாகியிருக்கிறது.

பிரேமதாஸாவை 38 வீத மக்களும், அத்துலத் முதலியை 28 வீதமானோரும், சிறிமாவோ பண்டாரநாயக்காவை 19 வீதமானோரும் ஆதரித்துள்ளனர்.

தினேஷ் குணவர்த்தனா, சிறிமாவோவின் மகளான சந்திரிக்கா குமாரணதுங்க, வாசுதேவ நாணயக்கார, அனுரா பண்டாரநாயக்கா ஆகியோர் 4, 5, 6, 7 ஆம் இடங்களைப் பிடித்துள்ளனர். [உ-10]

## பச்சனூர் முகாம் அகதிகள் 10 பேர் கடத்தப்பட்டனர்!

### கிண்ணியாவிலும் பலர் மறைவு

யாழ்ப்பாணம், ஜன. 26

திருகோணமலை, பச்சனூர் அகதி முகாமிலுள்ள தமிழ் மக்கள் பலர் — கடந்த இரு வாரங்களில் — சமூக விரோதக் கும்பல் ஒன்றினால் கடத்தப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த முகாமில் இருந்த பத்துக்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் காணாமற் போய்விட்டனர் என்று அங்கிருந்து கிடைத்த தகவல் ஒன்று தெரிவிக்கிறது.

இதேசமயம் கிண்ணியாவிலும் அகதியாகியுள்ள தமிழர்கள் பலர் மர்மமான முறையில் அடிக்கடி காணாமற் போகின்றனர் என்றும் —

அந்தப் பகுதிகளுக்கு சமூக சேவை நிறுவனங்களைச் சேர்ந்தோர் செல்வது கூட தடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

### நாளை முதல் யாழ். நகரில்

## போக்குவரத்து விதிகளை மீறுவோருக்கு அபராதம்

### அந்த இடத்திலேயே விதிக்கப்படும்

யாழ்ப்பாணம், ஜன. 26

வீதிப் போக்குவரத்து விதிகளை மீறும் சைக்கிளோட்டிகள், வாகனச் சாரதிகள் ஆகியோருக்கு அந்த இடத்திலேயே அபராதம் விதிக்கும் நடைமுறை நாளை முதல் யாழ். நகரில் அமுல் செய்யப்படவிருக்கிறது.

இந்த நடவடிக்கைகளில் தமிழீழ காவல் துறையினர் ஈடுபடுவர் எனத் தெரியவருகிறது.

அபராதம் விதிக்கப்படுவோர் அந்தத் தொகையைச் செலுத்தியதும், அதற்குரிய ரசீது அந்த இடத்தில் வைத்தே அவர்களுக்கு வழங்கப்படும் என்றும் அறியவருகிறது. [உ-5]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### மணமகள் தேவை

தற்போது விடுமுறையில் நிற்கும் மணமகன் வயது 34 பிரான்சில் 14 வருடங்களாக தொழில் புரிபவர். நட்சத்திரம் ரோகினி, கிரகபாவம் 4 செவ்வாய் பாவம் 8 ஜாதகம், படத்துடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: A. C. மகேந்திரன், நீர்வேலி வடக்கு, நீர்வேலி. [19437]

### மணமக்கள் தேவையா?

எம்மிடம் உள்நாட்டு ஆண்களும், வெளிநாட்டு மணப்பெண்களும் ஏராளமாக இருக்கிறார்கள். மாற்றுச் சம்பந்தத்தை விரும்புவோருக்கும், விரும்பாதோருக்கும் புரிந்துணரக் கூடிய முறையில் திருமணம் செய்து வைக்கலாம். மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம். [19452]

### மணப்பெண் தேவை

தனியார் துறையைச் சேர்ந்த நல்ல வருவாயுள்ள 36 வயதுச் செவ்வாய்க் குற்ற மற்ற கிரகபாவம் குறைந்த ஜாதகருக்கு,யாழ்நகர் அணித்தாகச் சைவப் பண்புள்ள குடும்பத்து 31 வயதுக்குக் குறைந்த அழகிய மணப்பெண் தேவை. ப. சோமசுந்தரம், 122, சிவன் கோவில் வீதி, திருநெல்வேலி. [19432]

### மணமகன் தேவை

உதயச் செவ்வாய் உள்ள 27 வயது I.C.M.A., B.Com. பட்டதாரியான பெண்ணுக்கு மணமகன் தேவை. டாக்டர் அல்லது எஞ்ஜினியர் மணமகனைஎதிர்பார்க்கிறார்கள். தகுந்த சீதனம் கொடுக்கப்படும். தொடர்பு:- திருமுருகன் சோதிட நிலையம், கோண்டாவில் வடக்கு. (டிப்போ முன்பாக) [19474]

### பெண் லிகிதர் தேவை

தனியார் கல்வி நிறுவனம் ஒன்றுக்கு பெண் லிகிதர் தேவை. 31-01-92 க்கு முன் தொடர்பு கொள்ளவும். உயர்தராதரக் கல்வி நிலையம், பருத்தித்துறை வீதி, 1ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [சி-1427]

### திருமண சேவை

எம்மிடம் ஆண், பெண் மணமக்கள் பலவித தொழில்களில் உண்டு. நேரில் வர முடியாதவர்கள் ஜாதகம், புகைப்படத்துடன் கடிதமூலம் விண்ணப்பிக்கவும். சுவாமியார் இராசகுலசிங்கம், விநாயக திருமண சேவை, 53/5, அன்னசத்திர ஒழுங்கை, கந்தர்மடம். [19426]

### ஸ்ரீமுருகன் மங்கள சேவை

சகல தொழில்களிலும் மணமகன்கள், மணமகள்கள் எம்மிடம் உண்டு. திருமணத் தொடர்பு செய்து கொடுக்கப்படும். புகைப்படங்களுடன் எல்லா நாட்களிலும் எம்முடன் தொடர்பு கொள்ளலாம்: திருமுருகன் சோதிட நிலையம், கோண்டாவில் வடக்கு. (டிப்போவுக்கு முன்பாக) [19473]

### ஜோதிடம்

தீராத கடன் தொல்லை, தொழில் நட்டம், கல்விக் குழப்பம், விவாகம் நடவாமை, சாப தோஷங்கள் நீங்கி அதிர்ஷ்டத்துடன் வாழ ஜாதகத்துடன் நேரில் வரவும். சாந்தி பரிகாரங்கள் கூறுவதுடன் யந்திரங்களும் வழங்குகிறோம். ஸ்ரீமாவை விநாயகர் சோதிட நிலையம், 96, கோவில் வீதி, நல்லூர். (ஸ்ரீ கைலாச பிள்ளையார், கோவிலடி) [19477]

### அம்பாள் திருமண சேவை

பட்டதாரி Doctors, I. C. M. A., Trained Teachers, A/L Teachers ஆகிய மணப்பெண்களுக்கு மணமகன் தேவை சைவத்திலும் மணப்பெண்கள் இருக்கிறார்கள். விண்ணப்ப முற்பணம் ரூபா 50/-. சின்னச்சாமி குருக்கள் சண்முகஐயர், வீரமாகாளி அம்மன் கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். [19466]

### தவறிவிட்டது

645682548 இலக்க இராசையா கலாராணி வேலணை எனும் முகவரியிடப்பட்ட அடையாள அட்டை 20-01-92 இல் பண்டத்தரிப்பு-யாழ்ப்பாணத்திற்கிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பாலாஜி புத்தகசாலை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் தயவு செய்து ஒப்படைக்கவும். [5019]

### ஜோதிட நூல்கள்

கருணைக்கடல் சாயிபாபா முற்பிறவி அவதார அற்புதங்கள், கருணைமழை பொழியும் பகவான் புத்தாண்டுப் பலன்கள்:- சோவிதா, ரகுநாதன் புத்தகசாலைகள் யாழ்ப்பாணம். நூல்களாசிரியர்; பேராசிரியர் சத்தியதாஸன் (Mech. E. Elec. E.) சித்தன்கேணிச் சந்தி. [19470]

### அச்சு வேலைகள்

திருமணம், திறப்பு விழா, புதுமனை புகுவிழா அழைப்பிதழ்கள், மற்றும் அந்தியேட்டி அழைப்பிதழ்கள், நினைவு மலர்கள் ஆகியவற்றைச் சிறந்த முறையில் உரிய வேளையில் நீங்கள் அச்சிட்டுப் பெற்றுக் கொள்ள நாடுங்கள்: அருண் அச்சகம், 15, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். [சி/1256]

### விஞ்ஞான பாடத்திட்டம்

ஆண்டு 6—11 விஞ்ஞான பாடத்திட்டம் ஆண்டு. அலகு பாடவேளைப் பிரகாரம் வெளியிடப்பட்டுள்ளது. விலை ரூபா 60.00 இ. சங்கர் 430, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். [சி 1425]

### O/L கணிதம்

92, 93 ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைகளில் உயர்ந்த பெறுபேறுகளை அடைவதற்குக் கணிதம் கற்பிக்கப்படும். ஆசிரியர்: B. Sc. 85, சிவன் கோவிலடி, திருநெல்வேலி. [5009]

### புலமைப் பரிசில் பரீட்சை

ஆண்டு - 5 புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை எமது நிலைய மாணவர்களுக்கு 26-1-92 ஞாயிறு மு. ப. 8-00 மணிக்கு நடைபெறும். ஒவ்வொரு மாதத்திலும் மூன்றாவது ஞாயிறு நடைபெறும். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (19463)

## இன்று ஆரம்பம்

**26—01—1992**
12 — 1 p.m.


விலங்கியல்
**ஆர். ஈஸ்வரதாசன்**
B. Sc. (Cey.)

★ முளையவியல் ★

**Personal**
**New Science Centre**
*Jaffna.*
[சி-1428]

உள்ளூரில் உற்பத்தி
விடுதலைக்கு உயிர்நாடி

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 13 — 04 — 1911
உதிர்வு: 26 — 12 — 1991

அமரர்
**கணபதிப்பிள்ளை கதிரவேலு**

பெற்று வளர்த்துப் பேணிக் காத்த
பெரும் தெய்வமே!
என்றும் எங்கள் மனதை விட்டு
அகலாத தந்தையாரே!
எங்கு தேடினும் கிடைத்திடாப்
பெரும் களஞ்சியமே!
எங்களுக்காய் வாழ்ந்த எங்கள்
தந்தையே!

எம் வாழ்வுக்கு ஒளி விளக்காய் நின்று, அன்புடன் வழிகாட்டி, பண்புடன் வாழவைத்த தெய்வமே!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவன் திருவருளைப் பிரார்த்திக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

334, கோவில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். [19479]

★ தமிழகத்தில்

# 3 புலிகள் உட்பட 4 பேரை சரணடையும்படி உத்தரவு

சென்னை, ஜன. 26

மூன்று விடுதலைப் புலிகளையும் மற்றோர் இந்தியத் தமிழரையும் அடுத்த மாதம் 19ஆம் திகதிக்குள் தம்முன் சரணடையும்படி, தமிழ்நாடு சிறப்பு நீதிமன்றத்தின் நீதிபதி எஸ். எம். சித்திக் உத்தரவிட்டுள்ளார்.

பட்டணம்காத்தான் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாகத் தேடப்பட்டு வரும் நான்கு பேருக்கே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

இந்தச் சூட்டுச் சம்பவத்தின் போது பொலீஸ் தடை முகாமில் இருந்த கான்ஸ்டபிள் ஒருவரும் மற்றொரு பொதுமகனும் கொல்லப்பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக அகஸ்ரின், கபூர் என்றழைக்கப்படும் தம்பிப்போடி சிவநாயகம், தமிழகத்தைச் சேர்ந்த ஜோர்ஜ் ஆகியோரும் பழனி என்ற சிவத்நானும் தேடப்பட்டு வருகின்றனர்.

இவர்களையே இம்மாதம் 19ஆம் திகதிக்குள் தம்முன் ஆஜராகும்படி பத்மநாபா மற்றும் ராஜீவ் காந்தி கொலைச் சம்பவங்களை விசாரித்து வரும் சிறப்பு நீதிமன்ற நீதிபதி எஸ். எம். சித்திக் உத்தரவிட்டார்.

இவர்களில் ஜோர்ஜ் என்பவர் தி. மு. க. தலைவர் கருணாநிதியின் மகனான அழகிரியின் நெருங்கிய நண்பர் என்றும் —

பழனி என்ற இலங்கைத் தமிழர், ஈழப் போராளியான சாந்தனின் கூட்டாளி என்றும் தமிழக பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. [உ-த]

## "வல்லைப் புயல்" நினைவாக வடமராட்சியில் நடந்த ஊர்வலமும் கூட்டமும்

''வல்லை புயல்'' விமானக் குண்டு வீச்சு ஓராண்டு நினைவையொட்டி மாபெரும் ஊர்வலம் ஒன்று நேற்று முன்தினம் மாலை 4 மணிக்கு வல்லை நெடியகாடு பிள்ளையார் கோவிலிலிருந்து ஆரம்பமானது.

ஊர்வலம் நெடியகாடு பகுதியிலிருந்து ஆரம்பமாகி வல்வெட்டித்துறை சந்தியூடாக தீருவில் மாவீரர் வீதிக்குச் சென்று, பின் ஆதிகோயிலடியை வந்தடைந்தது. அங்கு பொதுக் கூட்டம் ஒன்றும் நடைபெற்றது.

கூட்டத்தில் விடுதலைப் புலிகள் பிரமுகர்களான திரு. பரா, திரு. ஸ்ரனி, திரு. இளம்பரிதி, திரு. அரசண்ணா, மகளிர் முன்னணியைச் சேர்ந்த செல்வி கவிதா, கல்லூரி அதிபர் திரு. அனந்தராஜ் ஆகியோர் உரையாற்றினர்.

கடந்த வருடம் ஜனவரியில் தொடர்ந்து மூன்று நாட்கள் வல்லைப் பகுதியில் ஸ்ரீலங்கா விமானப் படையினர் விடாது வீசிய அகோரக் குண்டு வீச்சினால் பெருமளவு உயிர், உடைமைச் சேதங்கள் ஏற்பட்டன என்பது தெரிந்ததே. அந்த அழிவு நடவடிக்கையின் நினைவை ஒட்டியே ஊர்வலமும், பொதுக் கூட்டமும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. [உ-165]

## பால் கறக்கும் "ரோபோ" மனித யந்திரம் கண்டுபிடிப்பு

அம்ஸ்ரடாம், ஜன. 26

பசுவில் இருந்து பால் கறக்கும் ரோபோ மனித இயந்திரம் ஒன்றை டச்சு நிபுணர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

தற்போது பாவனையில் உள்ள பால் கறக்கும் இயந்திரம் போன்றல்லாது, இந்த ரோபோ இயந்திரம் பண்ணையின் பல பகுதிகளுக்கு 'நடமாடி' ச் சென்று, பால் கறக்கும் பசுக்களைத் தானே தெரிவுசெய்து, மனித உதவி எதுவுமின்றி அப் பசுக்களில் இருந்து பால் கறக்கக் கூடியதாகத் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த ரோபோ இயந்திரம் அறிமுகம் செய்யப்பட்டதை டச்சு நாட்டு பண்ணையாளர்கள் வரவேற்றிருக்கின்றனர். [த-எ]

## கோழிகளுக்கு தடுப்பூசி

யாழ்ப்பாணம், ஜன. 26

யாழ். மரியாள் பேராலயம் [ஆசனக் கோவில்] அருகாமையிலுள்ள கிறீன் பீல்ட் சனசமூக நிலையத்தில் நாளை மறுதினம் [செவ்வாய்] முற்பகல் 10 மணிக்கு கோழிகளுக்கு தடுப்பூசி — இலவசமாக — செலுத்தப்படும் என கால்நடை வைத்திய அதிகாரியினால் அறிவிக்கப்பட்டுள்ளது. [ஒ-10]

## சங்காபிஷேகம்

நல்லூர் கொன்றையடி வைரவர் சுவாமி கோவில் வருடாந்த விசேட சங்காபிஷேகமும் திருவிழாவும் நாளை [திங்கட்கிழமை] காலை ஒன்பது மணிக்கு நடைபெறும்.

## தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

### தென்மராட்சி கல்விக் கோட்டம்

## விசேட பொதுக் கூட்டம்

இடம்: சாவகச்சேரி, இந்துக்கல்லூரி மண்டபம்,
காலம்: 27-01-1992 பிற்பகல் 4-00 மணி
விடயம்: 1. புதிய நிர்வாக சபை தெரிவு
2. 92 ஆம் ஆண்டுக்கான ஒழுங்கு விதிகள் அறிவிக்கப்படும்.

தென்மராட்சியிலுள்ள அனைத்து தனியார் கல்வி நிறுவன பிரதிநிதிகளும் தவறாது சமுகம் தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பொதுச் செயலாளர்,
யாழ். மாவட்டம்.

[19472]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் மாவட்ட நீதிபதி
# அமரர் சி. தம்பித்துரை நினைவாக

திருநெல்வேலி மண்வளமும், நீர் வளமும் மலிந்த ஓர் சிறந்த ஊராகும். திருநெல்வேலியின் செம்பாட்டு மண்ணில் தமிழ்ப் பண்பாட்டு நெறி தழைத்து வளர்ந்தது. திருநெல்வேலி மக்களின் மனவளம் வாழையடி, வாழையாக மதிப்பு வாய்ந்தது. இற்றைக்கு 370 ஆண்டுகளுக்கு முன் பின் இவ்வூர் சாலவாடிபுரம் எனவும் வழங்கியது. இந்த ஊரின் சிறப்பை அனுபவத்தில் அறிந்த மட்டுவில் தந்த பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள், இவ்வூரினைத் திருநல்வேலி எனப் புகழ்ந்தார். பசுவதையை எதிர்த்துப் பரதேசம் சென்ற ஞானப்பிரகாச சுவாமிகள் வாழ்ந்த ஊரும் இதுவே. சேர். பொன் இராமநாதன் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தினையும், பரமேஸ்வராக் கல்லூரியையும் இங்கேயே நிறுவினார். அப்பரமேஸ்வராக் கல்லூரியே இன்று பல்கலைக்கழகமாக வளர்ந்து திருநெல்வேலியைப் பட்டினமாக மாற்றி வருகிறது. இதன் மண்வாசனை மாண்புமிக்கது. இங்கே பல ஆலயங்களும், பாடசாலைகளும், புகழ் பூத்த பல நிறுவனங்களும் சிறந்து விளங்குகின்றன. இங்குள்ள பெரிய வீதிகளில் ஒன்று ஆடிய பாதத்தின் பெயரால் நடராசப் பெருமானை நினைவு செய்கிறது.

இத்தகைய சிறப்புக்களைப் பெற்ற புண்ணிய பூமியாகிய திருநெல்வேலியில் இந்த நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் பாரம்பரியமான பல்வகைச் சிறப்புக்களுடன் இல்லறமாகிய நல்லறம் புரிந்தவர்கள் சின்னப்பு அவர்களும், அர்மினிப்பிள்ளை அவர்களுமாவர். இவர்களின் இல்லறத்தின் பயனாக வந்து வாய்த்த பிள்ளைகளுள் தம்பித்துரை அவர்கள் 7-8-1906 ஆம் ஆண்டில் தோன்றினார். இவர் புகழோடு தோன்றியவர் என்பதற்கு அச்சுவேலியைச் சேர்ந்த சோதிடர் மன்னன் கணபதி அவர்களின் சோதிடம் சான்று பகர்ந்தது. இக்குழந்தை ''சிம்மாசனம் ஏறுவார்'' என்று சோதிடர் அன்றே கூறிவைத்தார்; அது பொய்க்கவில்லை.

அமரர் இளமையிலேயே விவேகபூர்வமுள்ள குழந்தை. தமது இளமைக் கல்வியைத் திருநெல்வேலியில் கற்றபின் யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரியில் 1914—1928 ஆம் ஆண்டுவரை படிப்பைத் தொடர்ந்தார். பின்பு கொழும்புப் பல்கலைக்கழகக் கல்லூரிக்குத் தெரிவாகி 1930 ஆம் ஆண்டு வரை அங்கு கல்வி பயின்று சட்டக்கல்லூரியில் சேர்ந்து 1936 ஆம் ஆண்டு ''அட்வகேட்'' பட்டம் பெற்று வெளியேறினார்.

1936 — 1947 ஆம் ஆண்டு வரை யாழ்ப்பாணம் சாவகச்சேரி, பருத்தித்துறை, ஊர்காவற்றுறை, மல்லாகம் அத்துடன் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய நீதிமன்றங்களில் பிரதானமாகக் குற்றவியல் வழக்குகளை ஏற்று, நடாத்தி, வாதாடி தம்மை ஓர் முன்னணி வழக்குரைஞராக ஆக்கிக்கொண்டவர். பல பெயர் பெற்ற வழக்கறிஞர்களுடன் வாதாடி வெற்றி கண்டவர். பணவசதி அற்றவர்களுக்கும், தனது கிராம மக்களுக்கும், உறவினர்களுக்கும் இலவசமாக நீதிமன்றங்களில் வாதாடி பலரது அன்பையும் நன்மதிப்பையும் பெற்றவர். அவரது புத்திக்கூர்மைக்கும், ஆற்றலுக்கும், தன்மான உணர்வுக்கும் வழக்கறிஞர் தொழில் பொருத்தமாக அமைந்ததெனப் பலரும் பேசிக் கொண்டனர். வடமாகாணத்தில் தலை சிறந்த வழக்கறிஞராக இவர் விளங்கினார்.

இவரின் திறமையையும் ஆற்றலையும் கண்ட நீதித்துறையினர் சிலாபத்தில் 15-10-1948 இல் நீதிவானாக நியமித்தனர். இவர் அவிசாவளை, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் நீதிவானாகக் கடமையாற்றி பதவி உயர்வு பெற்று அனுராதபுரம், பருத்தித்துறை, மட்டக்களப்பு, கண்டி, கொழும்பு ஆகிய மாவட்டங்களில் மாவட்ட நீதிபதியாகக் கடமையாற்றி, 1966 ஆம் ஆண்டு ஓய்வு பெற்றார். நியாயவாதித் தொழிலில் நல்ல மதிப்பும், முன்னேற்றமும் அடைந்த இவர் இளமையிலேயே நீதிபதியாக நியமனம் பெற்று நீதியை ஆராய்வதிலும், காண்பதிலும் வல்லவராய் விளங்கினார்.


அமரர் சி. தம்பித்துரை

நியாயம் இருபக்கத்தாரும் பேசுவார்கள். ஆனால் நீதி நடுநிலை நின்ற நல்நெஞ்சுக்கே புலனாவது. நீதியைப் பெறவே நியாயங்கள் ஆர்ப்பரிக்கின்றன. நீதி இறைமையானது.

''பண்டுமால் அயன் அறியா நீதியே'' என்று திருமுறைகள் இறைவனை நீதியெனப் போற்றுகின்றன.

அமரர் தம்பித்துரை வழங்கிய பாரபட்சமற்ற நீதியைப் பற்றி நீதிமன்ற ஏடுகளே சான்று பகர்கின்றன. நீதித்துறையில் வழக்காளி, எதிரி ஆகிய இருவரையும் தமக்கு இயல்பாக அமைந்த இன்முகத்தோடு நோக்குவது வழக்கம். இருபக்கத்தாரையும் தணிய வைக்கும் தாராளமான மனப்பாங்கைப் பெற்றவர். இருபகுதியினரும் ஒப்புக் கொள்ளும் வகையில் தீர்ப்பளிக்கும் சாமர்த்தியமும் அவரிடமிருந்தது. சட்டத்தரணிகளின் ஆரவாரமான விசாரணைகளைப் புன்முறுவலோடு கவனித்துக் கொள்வார்.

## நேர்மையும், மதிநுட்பமும்

இவரைப் பற்றிப் புகழ் பெற்ற சட்டத்தரணி ஒருவர் கூறிய பொழுது;

'' He was a learned and up right Judge '' என்று கூறக் கேட்டுள்ளோம். கடும் நேர்மையும், மதிநுட்பமும் உள்ளவரெனப் பலரும் பாராட்டியுள்ளனர். இவர் சினந்து எவரைப் பற்றியும் குறைவாகப் பேசியதை எவரும்கேட்கவில்லையெனலாம் இவரின் தீர்ப்பு இருபகுதியினரும் ஒப்புக் கொள்ளக்கூடியதாகவே அமைந்ததினால் மேல் விசாரணைக்கான மனுக்கள் உண்டாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. நியாய விசாரணையின்போது இருதரப்புச் சட்டத்தரணிகளும் இவரை நன்கு மதித்தனர். வெறுப்பு உணர்வோ, வேற்றுமையோ காட்டாமல் முகத்தில் புன்முறுவல் தவழ வழக்கைக் கேட்டுமுடிவில் தீர்ப்புக் கூறும்போது முகத்தில் தவழ்ந்த சாந்தத்தை எல்லோரும் மதித்தனர். ''How Beautiful duty is, when performed'' என்பது ஆங்கிலத்தில் வழங்கும் ஓர் அருந்தொடர். திருநெல்வேலி தந்த முதல் நீதிபதி என்று ஊரவர் பெருமை கொண்டனர்.

'வல்லவனின் நெஞ்சு ஈரமானது. இரக்கம் நிறைந்தது'' என்பது பெரிய புராணம். ''ஈரநெஞ்சினர் யாதுங் குறைவிலர் அவருடைய வீரம் விளம்ப முடியாதது'' என்பது சேக்கிழார் வாக்கு. தம்பித்துரை அவர்களின் வீரம் விளையாட்டுத் துறையில் பெருமளவு விளங்கியது. சென். ஜோன்ஸ் கல்லூரியில் படிக்கும் காலத்தில் தனது தோம்ஸன் இல்லத்திற்கு அதிக புள்ளிகளைப் பெற்றுக் கொடுத்துப் புகழ்பெற்றவர். கால்பந்தாட்டம், ஓட்டம், நீளம் பாய்தல் போன்றவற்றில் பல சாதனைகளைப் புரிந்தவர். கொழும்புப் பல்கலைக் கழகக் கல்லூரி, சட்டக் கல்லூரிகளில் பயிலும் காலத்தில் உதைபந்தாட்டக் கோஷ்டியின் தலைவனாக இருந்து சிறப்புப் பாராட்டுகளைப் பெற்றுக் கொண்டதுடன் Foot-ball Colours என்னும் உயர் விருதும் இவருக்குக் கிடைக்கப் பெற்றது. கொழும்புப் பல்கலைக் கழகக் கல்லூரி உதைபந்தாட்டத் தலைவனாக இருக்கும் காலத்தில் சட்டக் கல்லூரி, மருத்துவக் கல்லூரிகளுடன் எதிர்த்து விளையாடித் தனது பல்கலைக் கழகத்திற்கு வெற்றியைத் தேடிக் கொடுத்தவர்.

## கலைஞர்

இவர் இசை, நாடகத் துறைகளில் சிறந்த ஆற்றல் பெற்று விளங்கினார். பல்கலைக்கழகத்தில் ஆங்கில நாடகங்களில் முக்கியமாக சேக்ஸ்பியர் நாடகங்களில் பிரதான பாத்திரங்களை ஏற்று நடித்துப் புகழ் பெற்றவர். இசை மன்றக் காரியதரிசியாகவும் கடமையாற்றியவர் இவரது இசைத் திறமையைப் பேராசிரியர் சுந்தரலிங்கம் தம்பதிகள் பல தடவைகள் பாராட்டியுள்ளனர். இராகம் தவறாமல் பாடல்கள் பாடுவதில் குறிப்பாகத் தேவாரம் பாடுவதில் திறமை பெற்றவர்.


அமரர் திருமதி
மா. தம்பித்துரை

தம்பித்துரை அவர்களின் வாழ்வுத் துறையும் ஒளிமயமானது. முன்னமே நெருங்கிய உறவினராகிய நீர்ப்பாசனப் பொறியியலாளர் கைலாசம், மனைவி ஆச்சிக்குட்டி என்பவர்களின் மகளாகிய மாருதப்புரவீகவல்லி அவர்களை மணஞ்செய்திருந்தார்.

இவர் இராமநாதன் கல்லூரியில் உருவானவர். இராமநாதன் அவர்களின் இலட்சியப் பெண்ணாக வளர்ந்து இல்லறத்தில் சகதர்மினியாக பணிபுரியப் பழகியவர். இத்தகைய பயிற்சி விசேடத்தை அனுபவத்தில் அறிந்த தம்பித்துரை அவர்கள் தனது நண்பர்களுக்கும் இளஞ்சந்ததியினருக்கும் திருமண சம்பவம் காரணமாக ஆலோசனை கூறும் பொழுது ''இராமநாதன் கல்லூரிப் பழைய மாணவியைப் பார்த்து மணஞ் செய்யுங்கள்'' என்று கூறுவது வழக்கமாகும். மனத்தக்க மாண்புடையவரும் திருநெல்வேலி மாதர் சங்கத் தலைவியுமான மாருதப்புரவீகவல்லி மனையாள் மதிப்புக்குரிய மாது சிரோன்மணியாக வந்து அமரர் தம்பித்துரை அவர்களுக்கு மனைவியாக வாய்த்தமை ஒருபேறு எனலாம். இவரை ஊர்மக்கள் அன்புடன் 'மருதம்மா' எனவும் அழைப்பதுண்டு. இவருடைய வாழ்வில் எல்லாம் மங்களகரமாகவும், மகிழ்ச்சிகரமாகவும் அமைந்தது எனலாம். வீட்டுத் திருமகளாகிய மனைவியர் எல்லாவற்றுக்கும் கைகொடுத்துப் பூவோடும் பொட்டோடும் மறைந்தமை ஒரு பேறு.

''உரிமை முன் போக்கி
அல்லாள்
ஒளியுடை மன்னன்
போகான்''

என்பது திருத்தக்கதேவர் வாக்கு. தன் மனைவியை வழியனுப்பியபின் பிள்ளைகள் யாவாக்கும் தாயாய், தந்தையாய் கடமை செய்தமையில் இவரிடம் ஓர் இறைமைக் குணம் இருந்ததை அறியலாம்

## சமூகப் பணி

அமரர் ஓய்வுபெற்று இருந்தாரேனும் அவர் ஓய்ந்திருக்கவில்லை. சமூகப்பணி பரவலாகப் பரந்திருந்தது. ஒரு காலத்தில் திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கம் நாடறிப் பணி புரிந்தது. இந்தச் சங்கத்தில் அங்கத்தவராயும், நிர்வாகத்தவராயும், தலைவராயும், பாதுகாவலராயும் அமரர் அவர்கள் பணிபுரிந்தார்.

இவர் தாம்கற்ற சென். ஜோன்ஸ் கல்லூரியைத் தன் இதயத்தே வைத்து பழைய மாணவ மன்றப் பணிகளில் தம்மை முழுமையாக ஈடுபடுத்தி அக்கல்லூரியின் வளர்ச்சிக்காக உழைத்ததோடு 1954-56 வரை பழைய மாணவர் மன்றத் தலைவராக விளங்கினார். பின்னர் கல்லூரிப் பணிப்பாளர் சபை அங்கத்தவனாக நியமிக்கப்பட்டு கல்லூரியை வழி நடத்திச் செல்லும் பொறுப்பை ஏற்றவர்களில் ஒருவரானார். தமது முதுமைக் காலத்திலும் கல்லூரிக்கு விஜயம் செய்து அதன் வளர்ச்சியில் தமக்குரிய அழியாப்பற்றை வெளிப்படுத்தினார்.

அத்துடன் அமரர் அவர்கள் 1969 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியினதும், கிளைப் பாடசாலையினதும் அதிகார முகாமைக் குழுவில் அங்கம் வகித்தமையோடு, குழுவின் தனாதிகாரி

[4 ஆம் பக்கம் பார்க்க]

---

### அமரர் பற்றி உறவினர் ஒருவர்...

ஊரில் முதல், முதலாக நீதிபதியாகப் பதவியேற்று பெருமை தேடித் தந்தவர், கிராம மக்களுடனும், உறவினர்களுடனும் மிக்க அன்பாகப் பழகிக் கொண்டவர். கஷ்டங்கள் ஏற்பட்ட வேளைகளில் உறவினர்களுக்கும் ஊரவர்களுக்கும் பலவித உதவிகள் புரிந்தவர். திருநெல்வேலியில் அமரர் தம்பதியினர் கலந்து கொள்ளாத வைபவங்களே இல்லை எனலாம். ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றேன்,

**பொ. சேனாதிராசா,**
திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம்.

### இனபேதமின்றி வாழ்ந்தவர்

பிறந்த இடம், வாழ்ந்த இடம், தொழில் புரிந்த இடம் ஏனைய இடங்களிலும் இனிமையான பேச்சாலும், நற்செய்கையாலும், எல்லோருடைய மதிப்பையும் பெற்றுவாழ்ந்தவர். அனைவருக்கும் பொறுமையுடன் ஆறுதல் அளித்த ஒரு பெரியார் அமரராகி விட்டார். அவரின் ஆத்மா அம்பலத்தான் சிருஷ்டியில் அமைதி பெற பிரார்த்திப்போமாக.

**பிரதம குருக்கள்,**
திருநெல்வேலி-
சிவன் கோவில்.

### ஆயிரம் பிறைகள் கண்டு அமரராயினார்

தம்பித்துரை அவர்கள் எண்பத்தாறு ஆண்டுகள் வரை வாழ்ந்து ஆயிரம் பிறைகள் கண்டு அமரராயினார். அவர் பூரண வாழ்வு வாழ்ந்து புனிதமான பணி செய்து புகழ் உடம்பை இங்கே விட்டுப் பூதவுடம்பை நீத்துக் கொண்டார். நீத்தார் பெருமை பெரிது. ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போம்.

**க. சி. குலரத்தினம்,**
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

### சட்டமேதை

சட்டத்துறையில் சாதனைகள் பல படைத்தவரும், நீதித்துறையின் தூய்மையையும், பெருமையையும் நிலைக்க வைத்தவரும் ஆகிய முன்னாள் மாவட்ட நீதிபதி அமரர் சி. தம்பித்துரை அவர்களின் கொள்கைகளைப் பின் பற்றி வாழ்வோமாக.

**இராஜராஜேஸ்வரன்-**
**தங்கராசா,**
செயலாளர்,
சட்டத்தரணிகள் சங்கம்,
யாழ்ப்பாணம்.

### சிறந்த வழிகாட்டியும் பாதுகாவலரும்

திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கத்தின் அங்கத்தவராகவும், தலைவராகவும், பாதுகாவலராகவும் பணிபுரிந்த முன்னாள் மாவட்ட நீதிபதி அமரர் சின்னப்பு தம்பித்துரை அவர்களின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

**தலைவர்,**
இந்து வாலிபர் சங்கம்,
திருநெல்வேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடியோ கசெட்டுகள் தேவை

நல்ல நிலையிலுள்ள பாவித்த
வீடியோ கசெட்டுகள் தேவை.
நியாயமான விலை தரப்படும்.

**நியூ விக்ரேஸ்,**
யாழ்ப்பாணம்.

[19475]



## வைத்திய சேவை

★ 50 வருடங்களுக்கும் மேலாக மூன்று தலை முறையில்
★ முறிவு - நெரிவு வைத்தியத்தில் முதன்மை வகிப்பவர்கள்.
★ ஆண்கள், சிறுவர், பெண்கள், உபாதைகளை நீக்க;

**அருள் மாதர் வைத்திய நிலையம்,**
45, சென். பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

[சி-1361]


## தசாக, கிருகயக்ஞ அழைப்பு

**18—01—1992** அன்று சிவபதமடைந்த
**திருமதி கோமதியம்மா கிருஷ்ணஐயர்**
அவர்களின் அபரக்கிரியைகள் பின்வரும் திகதிகளில் நடைபெறும்.

| | | |
|---|---|---|
| 27-01-1992 | திங்கட்கிழமை | தசாகம் |
| 28-01-1992 | செவ்வாய்க்கிழமை | ஏகோதிஷ்டம், மாசியம் |
| 29-01-1992 | புதன்கிழமை | சபிண்டீகரணம் |
| 30-01-1992 | வியாழக்கிழமை | கிருகயக்ஞம் |

மேற்படி கிரியைகளில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

**சிவஸ்ரீ கி. வைத்தீஸ்வரக் குருக்கள்,**
**சிவஸ்ரீ கி. நாராயணக் குருக்கள்,**
**மற்றும் குடும்பத்தினர்.**

பழம் றோட்,
கோப்பாய் தெற்கு.

[சி-1363]

## ஓராண்டு நினைவலைகள்



தாயின் மடியில்: **17 — 07 — 1969**

தாயக விடிவில்: **05 — 02 — 1991**

**மேஜர் ஸ்ரீ கதிர்காமத்தம்பி ராஜஸ்ரீ (ராசன்)**

திதி: 26 - 01 1992

ஆயிரம் வீரவித்துக்களின் ஒருவனான
எம்மினிய சிறியே
ஆண்ட வர்க்கத்தை அடக்க
வரிப்புலிதனை அணைத்தவனே
களம் பல சென்று புகழ் படைத்த
செந்தமிழ் வீரனே
கயவர்கள் படையாம் தச்சன் காடுதனில்
நெஞ்சினில் குண்டேந்திய மறவனே
நீ வீரம் புரிந்து நாடுவிட்டு காடு சென்ற
நாள் இன்றடா
நின் மலரடி வணங்கி நிற்கும்
அன்னை பூமியைப் பாரடா.

உன் பிரிவால் வாடும்:
**அம்மா, சகோதர, சகோதரிகள், மருமக்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.**

சாவகச்சேரி.

[19462]

# முன்னாள் மாவட்ட நீதிபதி......

[3 ஆம் பக்கத் தொடர்ச்சி]

யாகவும் கடமையாற்றியவர். அக்காலத்தில் நிதிப்பரிபாலனம் ஒரு சிரமமான செயலாகும். வயோதிபமடைந்தாலும் சபையின் செயற்பாடுகளில் தீவிரமாக உழைத்தவர்.

ஓய்வு பெற்ற நாள் தொடக்கம் இறைவனடி அடையும் வரை தம்பித்துரை அவர்கள் சுறுசுறுப்பாகவே இருந்துள்ளமையை 1968 ஆம் ஆண்டு தொடக்கம் 1981 ஆம் ஆண்டு வரை வரையறுக்கப்பட்ட யாழ்ப்பாண ஐக்கிய பண்டகசாலையின் இயக்குனர் சபையின் ஓர் அங்கத்தவராக இருந்துள்ளமை எடுத்துக் காட்டுகிறது. அவரது சட்ட அபிப்பிராயங்கள், தொழிலாளர் பிரச்சினைகள் சம்பந்தமான ஆலோசனைகள் மிகவும் பெறுமதியானவையாக இருந்தன. அச்சங்கத்தின் வளர்ச்சிக்குத் தன்னால் முடிந்த உதவிகளைச் செய்து கொண்டவர்.

### நகைச்சுவை பேச்சாளர்

அமரர் சி. தம்பித்துரை அவர்கள் தமிழிலும், ஆங்கிலத்திலும் தங்குதடையின்றி நகைச்சுவை ததும்ப விவேக பூர்வமாகப் பேச வல்லவர். அவர் சிலேடையாகப் பேசும் சாமர்த்தியம் வாய்ந்தவர். ஆயினும் கிண்டல், நையாண்டித்தனம் கலக்காமல் நாகரிகமாகப் பேசும் பண்புடையவர். இவரிடம் காணப்பட்ட தனித்தன்மையொன்று அவர் பிறர் தகைமைகளை மதித்துப் போற்றியமையாகும். உதாரணமாக ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிடின் அவர் தம்மிலும் இளையவராய அப்புக்காத்தர் சிற்றம்பலம் அவர்களின் எழுத்தாற்றலை வெகுவாகப் போற்றியவர்.

லேடி இராமநாதன் அம்மையார் கலாநிதிப்பட்டம் பெற்ற வைபவத்தை இராமநாதன் கல்லூரியினர் கொண்டாடிய பொழுது, பழைய மாணாக்கியராகிய திருவாட்டி வைத்திலிங்கம் பாராட்டுரை வழங்கினார். அந்தப் பேச்சைத் தம்பித்துரை அவர்கள் சிற்றம்பலம் அவர்களைக் கொண்டு எழுதுவித்து திருவாட்டி வைத்திலிங்கத்தைப் பேச நெறிப்படுத்தி விட்டார். அந்தப் பேச்சைக் கேட்ட லீலாவதி அம்மையார், உள்ளம் பூரித்து, ஆனந்தக் கண்ணீர் வடித்து, பேசிய பெண்ணைக் கட்டித்தழுவி முத்தமிட்டார். இந்தப் பேச்சாற்றல் வல்லமை தம்பித்துரை அவர்களால் வந்த பெறு பேறாகும். இவ்வாறாக மேடைப்பேச்சு, விருந்துப் பேச்சு, இலக்கிய வட்டப் பேச்சு (Table talks) என்பனவற்றில் திறமையுற்றிருந்தவர் தம்பித்துரை அவர்கள். அவரிடம் தனித்துவமான ஒரு புன்சிரிப்புத் தவழ்வது வழக்கம்.

யாழ். பல்கலைக்கழக நிர்வாகத்தினரின் வேண்டுகோளுக்கு இணங்கி 1981 — 1989 ஆம் ஆண்டு வரை பல்கலைக்கழகப் பேரவையின் உறுப்பினராக [Council Member] ஆகக் கடமையாற்றி பல்கலைக்கழக வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தவர்.

இவர் தமது பிள்ளைகளுக்குப் பொருட் செல்வத்தைத் தேடி வைப்பதிலும் பார்க்கக் கல்விச் செல்வத்தை வளர்ப்பதிலேயே கூடிய கவனம் செலுத்தினார். இவரது ஒரு மகனும், ஒரு மகளும் இவரைப் பின்பற்றிச் சட்டத் துறையிலும், ஒரு மருமகன் நீதிச்சேவையில் நீதிவானாக இருப்பதும் குறிப்பிடத் தக்கது.

### நற்போக்குவாதி

அமரர் மனித மேம்பாட்டு வழியிலேயே கற்று, வாழ்ந்து பணி செய்தவர். அவர் நற்போக்கு ஒன்றையே கருதி நல்லதையே சிந்தித்துப் பேசி வந்தவர். [illegible]

இருந்தார். அரசியலில் நிரம்பிய அறிவு பெற்றிருந்த போதிலும், அவர் அரசாங்க சபையையோ, பாராளுமன்றத்தையோ எட்டியும் பார்க்க விரும்பவில்லை. தமிழ்ப் பற்றும், விடுதலை உணர்வும் நிறைந்த அமரர் அரசியல் கட்சிகளின் ஒற்றுமைக்காக உழைத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் அரசியலில் நனையாமலே விலகித் தப்பிக் கொண்டவர்.

பல இந்து ஆலயங்களின் வளர்ச்சிக்காக அவற்றில் ஏற்பட்ட பிணக்குகளைச் சமாதானமாகத் தீர்த்து வைப்பதில் வெற்றி கண்டவர். மானிப்பாய் மருதடிப் பிள்ளையார், சிலாபம் முனீஸ்வரர், நயினாதீவு நாகபூஷணி அம்பாள், சன்னதி முருகன், திருநெல்வேலி சிவகாமசுந்தரி அம்பாள் ஆகிய ஆலயங்கள் குறிப்பிடத்தக்கவையாகும்.

அமரர் எண்பத்தாறு ஆண்டுகள் வரை வாழ்ந்து ஆயிரம் பிறைகள் கண்டு அமரராயினார். அவர் பூரணவாழ்வு வாழ்ந்து, புனிதமான பணி செய்து புகழ் உடம்பை இங்கே விட்டுப் பூதவுடம்பை நீத்துக் கொண்டார். ''நீத்தார் பெருமை பெரிது தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தாற் காணப் படும்'' என்பது திருக்குறள்.

அவர் விட்டுச் சென்ற பிள்ளைச் செல்வங்கள் அவர் விட்டுப்போன பணிகளைத் தொடர்ந்து பேணிச் செய்தல் வேண்டும். தமிழினம் ஒரு சிறந்த மகனை கடமை உணர்ச்சிமிக்க குடிமகனை இழந்து விட்டது. வாழ்நாள் முழுவதும் கௌரவமாகவே வாழ்ந்த அமரர் தம்பித்துரை அவர்கள் புகழ் வாழ்க.

**அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.**

---

**கல்லூரி வரலாற்றில் தன் பெயரைப் பொறித்துக் கொண்டவர்**

பழைய மாணவர் மன்றத்தலைவராகவும், பணிப்பாளர் சபை அங்கத்தவராகவும் விளங்கிய முன்னாள் மாவட்ட நீதிபதி அமரர் சி. தம்பித்துரை அவர்களின் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

**சி. தனபாலன்,**
அதிபர்,
சென். ஜோன்ஸ் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

---


கலைவண்ணம் மிளிரும் கவர்ச்சியான
அச்சு வேலைகளைச் செய்வதற்கு
விரும்புகிறீர்களா?
**தாமதியாது எங்களிடம் வாருங்கள்**

★ நாவல்கள்
★ திருமண அழைப்பிதழ்கள்
★ நினைவு மலர்கள்
★ பில் புத்தகங்கள்
★ பரீட்சை வினாத்தாள்கள்

இன்னும் இவை போன்ற உங்கள் ஓடர்களை
உரிய நேரத்தில் சிறந்த முறையில்
அச்சிட நாடுங்கள்

**உதயன்**

292/2, நாவலர் வீதி, :: :: யாழ்ப்பாணம்.


## ஓராண்டு நினைவஞ்சலி



**வீரவேங்கை பா. முகிலன்**
[யாழ். மத்திய கல்லூரி மாணவன்]

தமிழீழ மண்ணில்: **20 — 03 — 1973**
தமிழீழ மீட்பில்: **06 — 02 — 1991**

திதி: 26 — 01 — 1992

பள்ளியில் முகிலனாய் பழகி நின்றாய் - பின்
பாசறையில் சுக்கிளாவாய் உருவெடுத்தாய்
பகைவனின் தலைகளை களைந்தெடுத்தாய்-அவனை
பரலோகம் அனுப்பி நீ பெருமை கொண்டாய்.

மணற்காட்டில் காப்பரணாய் நீ இருந்தாய் – பின்
மறப் புலியாய் (தச்சன்) காட்டில் நீ உதித்தாய்
எல்லையில் எதிரிக்கு சவால் விடுத்தாய்
எம்மை நீ பிரிவினால் கலங்க வைத்தாய்.

● கிரியைகள் நெல்லியடி ஸ்ரீ பரமானந்த ஆச்சிரமத்தில் இன்று நடைபெறும்.

— **குடும்பத்தினர்**

65, குமாரசாமி வீதி,
யாழ்ப்பாணம்.

260, கச்சாய் வீதி,
சாவகச்சேரி.

[சி-1426]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### குற்றத்துக்கு தண்டனை எது?

ஆட்கள் காணாமற் போகும் மனித உரிமை மீறலில் உலக நாடுகளில் ஸ்ரீலங்கா தான் முதலிடம் வகிக்கிறது! கடந்த எட்டு வருடங்களில் பன்னிராயிரம் பேர் கடத்தப்பட்டுக் காணாமற் போகச் செய்யப்பட்டிருக்கிறார்கள்!!

ஸ்ரீலங்காவின் — அரசாங்கத்தின் — அரசாங்கப் படைகளின் — அவர்களின் கூலிப் பட்டாளங்களின் — இந்தச் "சாதனை" குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் கண்காணிப்புக் குழு தனது அறிக்கையில் சுட்டிக் காட்டியிருக்கிறது; கண்டித்திருக்கிறது.

ஐ. நா. சபையின் மனித உரிமைக் குழுவின் உறுப்பினர்கள் கடந்த வருட இறுதிப் பகுதியில் இங்கு வந்து நேரில் பெற்ற தகவல்கள், சேகரித்த புள்ளிவிவரங்களை அடிப்படையாக வைத்தே ஸ்ரீலங்காவின் "சாதனை" மதிப்பிடப்பட்டுள்ளது!

ஸ்ரீலங்காவின் அசுரத்தனச் சாதனையை அடுத்த வாரம் ஐ. நா. மனித உரிமைக் கண்காணிப்புக் குழு ஆராயப் போகிறது. அப்போது ஸ்ரீலங்கா இத்தனை காலமும் பூசி மெழுகி மறைத்து வந்த கொலைக்குற்றம் உலக அரங்கத்தில் ஊர்ஜிதம் செய்யப்படும்!

ஸ்ரீலங்காவுக்கு உதவும் நாடுகளின் கூட்டமும் இன்னும் பத்து நாட்களில் பாரிஸில் கூடப்போகிறது.

அங்கும் இம்முறைகையும் மெய்யுமாக ஐ. நா. குழுவிடம் பிடிபட்ட ஸ்ரீலங்கா அரசு, தனது குற்றத்தை மறைத்து, மழுப்ப முடியாது.

இனிமேல் இந்தக் குற்றத்தைச் செய்யமாட்டேன். என்னால் இயன்றவரையில் குற்றம் புரிவதைக் குறைத்துக் கொள்வேன். என்னை மன்னித்து மீட்சி தாருங்கள் என்று மன்றாடும் நிலையிலேயே ஸ்ரீலங்கா உள்ளது.

ஸ்ரீலங்காவின் வேண்டுகோளை ஏற்று, மன்றாட்டத்துக்கு மனமிரங்கி குற்றத்தை மன்னித்து நிதி உதவி வழங்க சம்பந்தப்பட்ட நாடுகள் மனம் கொள்ளும் நிலையும் உருவாகலாம்.

வடக்கு - கிழக்கில் தமிழ் மக்கள் அநியாயமாகக் கொல்லப்படுகிறார்கள். அதனுடன் சேர்த்துப் பெரும் பேரழிவை உண்டாக்கக் கூடிய பாரிய தாக்குதல் ஒன்றை யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்கள் மீது நடத்தவும் ஆயத்தங்கள் நடக்கின்றன.

ஐக்கிய நாடுகள் சபையின் அரசியல் சிவில் உரிமை சாசனம் உறுதி செய்யும் சுயநிர்ணய உரிமையை — மனித உரிமையையே — தமிழர்கள் கோருகிறார்கள். அவர்களை குண்டு வீசிக் கொல்வதும், வேறு இடங்களுக்கு பெயர்ந்து செல்லுமாறு கேட்பதும் மிகப் பெரிய அளவிலான மனித உரிமை மீறலாகும்.

ஆகையால் மேலைநாடுகள் தாம் உதவி வழங்குவதானால் தமிழ்ப் பிரதேசங்கள் மீதான இராணுவத் தாக்குதல்களை உடனடியாக நிறுத்துமாறு நிபந்தனை விதிக்க வேண்டும். அந்த நிபந்தனையை ஏற்க ஸ்ரீலங்கா மறுத்தால் நிதி உதவியை நிறுத்த வேண்டும். தமிழ்ப் பிரதேசங்களின் யுத்தம் நிறுத்தப்பட்ட பின்பே நிதி உதவி தரப்படும் என்று அழுத்தம் கொடுக்க வேண்டும்.

இம்முறையாவது ஸ்ரீலங்காவை நெருக்கிப் பிடிக்காவிட்டால், அது வழமையான வேடம் போட்டுத் தனது காரியத்தில் வென்றுவிடும். அந்தப் பலத்தைக் கொண்டு தமிழர்களை முற்றாக அழித்து விடும். உலக நாடுகள் இதனைத் தெரிந்து கொண்டால் சரி.

# பாகிஸ்தானை அணு வல்லரசாக்க புதிய இஸ்லாமிய நாடுகள் முயற்சி

## அமெரிக்க - இந்திய உறவு இறுக்கமாகிறது

**சோவியத் யூனியனின் மறைவைத் தொடர்ந்து தெற்காசியாவில் அணு ஆயுத ஆபத்து ஏற்படும் அறிகுறிகள் தென்படத் தொடங்கி உள்ளன. அமெரிக்காவின் புதிய கொள்கை ஆசியாவை எப்படி மாற்றி அமைக்கும் என்பது பற்றிய கண்ணோட்டத்தின் முதற் பகுதி நேற்று பிரசுரமாகியது.**

**இன்று எஞ்சிய பகுதி வெளியாகிறது.**

(நேற்றைய தொடர்ச்சி)

மத்திய ஆசியாவில் உருவான புதிய இஸ்லாமிய நாடுகளுக்கும், தெற்காசியாவில் உள்ள ஆப்கனிஸ்தான், பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய நாடுகளுக்கும் இடையே புவியியல் ரீதியான தொடர்புகளும் நெருக்கமாக இருக்கின்றன.

இத்தருணத்தில்—

சில தினங்களுக்கு முன்னர் தெற்காசிய நாடுகளான பாகிஸ்தான், இந்தியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுக்கு அமெரிக்க செனட் சபையில் ஆயுதக் கட்டுப்பாட்டுக் குழுத்தலைவரான செனட்டர் லாறி பிறெஸ்லர் விஜயம் செய்தார்.

முதல் கட்டமாக புதுடில்லி சென்ற செனட்டர் பிறெஸ்லர், இரண்டாம் கட்ட விஜயமாக இஸ்லாமபாத்துக்குச் சென்றார். அங்கு அவரைச் சந்திக்க பாகிஸ்தான் ஜனாதிபதியும், பிரதமரும் மறுத்து விட்டனர்.

அங்கு செய்தியாளர் மாநாட்டில் பேசிய செனட்டர் லாறி பிறெஸ்லர், பாகிஸ்தானிடம் அணுகுண்டு இருக்கிறது என்பதை அமெரிக்கா சந்தேகத்திற்கு இடமின்றி மிக உறுதியாக நிரூபித்து விட்டது என்றார். இந்தியாவிடம் அணுகுண்டு இல்லை என்றும் அவர் கூறினார் இப்பேச்சு அமெரிக்க வெளியுறவுக் கொள்கையில் ஏற்பட்டுள்ள பாரிய மாற்றத்தை வெளிப்படுத்தியது.

அமெரிக்க அதிபர் புஷ்ஷின் நெருங்கிய பாதுகாப்பு ஆலோசகராகவும் பணிபுரிபவர் செனட்டர் பிறெஸ்லர்.

மத்திய ஆசியாவில் உருவான புதிய இஸ்லாமிய நாடுகள் தான் அமெரிக்கா தனது தெற்காசிய நிலைப்பாட்டை பகிரங்கமாக மாற்றுவதற்குரிய காரணமாக அமைந்தனவா என்றும் கேட்கப்படுகிறது.

பல ஆண்டுகள் நட்பு நாடாக விளங்கிய ஒன்றிடம் அணுகுண்டு இருப்பதாக அமெரிக்கா பகிரங்கமாக கூறியது, தெற்காசியப் பிராந்திய நடவடிக்கைகளில் அது காட்டும் தீவிரத் தன்மையை வெளிப்படுத்துவதாக அமைந்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

**அமெரிக்க- இந்திய உறவு**

சோவியத் யூனியன் மறைவை அடுத்து உலக அரங்கில் 'உற்ற நண்பர்' ஒருவர் இல்லாது தத்தளித்த இந்தியாவுக்கு, அமெரிக்காவின் மாற்றம் வரப்பிரசாதமாக அமைந்து விட்டது.

கோர்பச்சேவின் ஆட்சி ஆட்டம் காணத் தொடங்கிய கடைசிக் கட்டத்தில் அமெரிக்காவின் நடவடிக்கைகளுக்கு இந்தியா மறைமுக ஆதரவு வழங்கி வரத் தொடங்கியது.

புதிய உலக சூழ்நிலையில் அமெரிக்க — இந்திய ராஜதந்திர உறவுகள் இராணுவக் கூட்டுறவு வரையில் இறுக்கமடைந்து வருகின்றன.

இந்தியாவின் முப்படைத் தளபதிகளும் அமெரிக்காவுக்கு இவ்வாண்டில் முக்கிய விஜயம் மேற்கொள்ளவிருக்கின்றனர்.

அமெரிக்க இராணுவ உயர் நிலைக்குழு ஒன்று புதுடில்லி வந்துள்ளது. நல்லெண்ண விஜயமாக அமெரிக்கப் போர்க்கப்பல் ஒன்று சென்னைக்கு விஜயம் செய்தது.

இந்த நிலையில் பிரதமர் நரசிம்மராவ் ஜனவரி 31 இல் நியூயோர்க்கில் நடைபெறவுள்ள ஐ. நா. பாதுகாப்புச் சபையின் விசேட கூட்டத்தில் கலந்து கொள்ளச் செல்லவிருக்கின்றார்.

15 உறுப்பு நாடுகளின் ஜனாதிபதிகளும், பிரதமர்களும் இம்மாநாட்டில் கலந்து கொள்கின்றனர்.

புதிய ரஷ்ய வல்லரசான ரஷ்யாவின் ஜனாதிபதியை வரவேற்றும் இக்கூட்டத்தில் இந்தியாவுக்கு நிரந்தர உறுப்பு நாடு என்ற அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் எழுப்பப்படுமா? என்று கேட்கப்படுகிறது.

இதற்குக் காரணம் புதுடில்லிக்கு விஜயம் செய்த செனட்டர் பிறெஸ்லர், உலகில் அதிக மக்கள் வாழும் ஜனநாயக நாடு என்ற முறையில் இந்தியாவுக்கு ஐ. நா பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்பு நாடு என்ற அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் என்று வற்புறுத்தி இருக்கிறார் என்பதேயாகும்.

பாகிஸ்தான் தன்னிடம் உள்ள அணு ஆயுதங்களை பகிரங்கமாக அழிக்க வேண்டும் என்று அமெரிக்கா கோரியிருப்பது, ஈராக் மீது எடுக்கப்பட்ட இராணுவ நடவடிக்கை போன்றதொன்றுக்கு முன்னோடியான எச்சரிக்கையா?

இஸ்லாமிய நாடு எதுவிடமும் அணு ஆயுதங்கள் இருப்பதை அமெரிக்கா விரும்பாத

**- தீபன்ராஜா -**

நிலையில் தான் ஆயுதங்களைக் கொடுத்து வளர்த்த பாகிஸ்தான் தன்னை மீறிச் செயல்பட அமெரிக்கா அனுமதிக்குமா?

எப்படித் தான் பார்த்தாலும் அணு ஆயுத யுத்தம் ஒன்று வரின் அது மூன்றாம் உலக நாடுகள் இருக்கும் ஆசியாக் கண்டத்தில் தான் என்பதற்கேற்பவே உலக அரங்கில் மாற்றங்கள் தென்படுகின்றன எனக் கூறப்படுகின்றது.

இந்த நிலையில் ஜனவரி 31 இல் புஷ் - ராவ் சந்திப்பு தெற்காசிய பிராந்தியத்தில் என்ன மாற்றங்களைக் கொண்டு வரும் என்பது ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகின்றது. ✶

# வீதி விபத்துக்களை தடுக்க காவல்துறை நடவடிக்கை!

## பொறுப்பாளர் நடேசன் தகவல்

யாழ்ப்பாணம், ஜன. 26

யாழ் நகரில் நாளை திங்கட்கிழமை முதல் வீதி விபத்துக்களைத் தடுக்கும் நடவடிக்கைகளில் தமிழீழ காவல்துறையினர் ஈடுபடுவர்.

காவல்துறைப் பொறுப்பாளர் திரு. பா. நடேசன் இத்தகவலை வெளியிட்டார்.

வீதி விபத்து தடுப்பு நடவடிக்கைகளுக்கு மக்களின் ஒத்துழைப்பைக் கோரி அவர் விடுத்த வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

விடுதலைப் போராட்டம் நடந்து கொண்டிருக்கும் இக்கால கட்டத்தில் எமது மக்களை கொடிய சிங்கள அரசிடமிருந்து மாத்திரமல்ல எமது தவறுகளிலிருந்தும் பாதுகாக்கும் பாரிய பொறுப்பை எமது இயக்கம் ஏற்றுள்ளது. இதன் ஒரு கட்டமாகவே தமிழீழ காவல் துறையின் போக்குவரத்துப் பிரிவு செயல்பட்டு வருகின்றது.

அண்மைக் காலங்களில் வீதி விபத்துக்கள் அதிகரித்து எமது மக்கள் பல இழப்புக்களை சந்தித்து வருகின்றனர். இவற்றை தடுப்பதற்காக நாம் பல முறை பத்திரிகைகள் மூலமும், வானொலி மூலமும் பல அறிவித்தல்களை கொடுத்திருந்தோம்; யாழ் நகரின் அநேகமான பாடசாலைகளுக்குச் சென்று வீதி விபத்துக்களைத் தவிர்த்து நடந்து கொள்வதற்கான விரிவுரைகளை வழங்கியுள்ளோம்; தொடர்ந்தும் வழங்கி வருகின்றோம். இருந்தும் வீதி விபத்துக்கள் தினமும் நடைபெறுகின்றன.

வீதிகளில் துவிச்சக்கர வண்டிகளில் செல்லும்போது பக்கம்



பா. நடேசன்

பக்கமாகவும், ஒருவரின் கையை இன்னொருவர் பிடித்துக் கொண்டும், கதைத்துக் கொண்டும் செல்வதால் ஏற்படும் விபத்துக்களைப் பற்றி நாம் பலமுறை கூறியிருந்தோம். நகரில் வாழும் பெரியோர்கள், கல்விமான்கள், பொதுமக்கள் பலர் தினமும் எமது காவல்துறை அலுவலகத்திற்கு வருகை தந்து இந்த விபத்துக்களைத் தடுப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கும்படி வேண்டுகோள் விடுக்கின்றனர்.

இத்தகைய வேண்டுகோள்களையும் எமது மக்களின் நலனையும் கருத்தில் கொண்டு, எதிர்வரும் திங்கட்கிழமை முதல் நகரின் அநேகமான முக்கிய ஸ்தானங்களில் தமிழீழ காவல் துறையின் உறுப்பினர்கள் வீதி விபத்து தடுப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்படுவர். இந்த நடவடிக்கைக்கு மக்கள் பூரண ஒத்துழைப்பு நல்க வேண்டும் — என்றும் அவர் கேட்டுள்ளார்.

## தற்காலிக ஆசிரியர் தெரிவு; புதன் நேர்முகப் பரீட்சை

பண்டத்தரிப்புக் கோட்ட அபிவிருத்திக் கழகத்தின் ஏற்பாட்டில் தற்காலிக ஆசிரியர் நியமனத்துக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் கொத்தணி ரீதியாக பின்வரும் பாடசாலைகளில் நடைபெறும்.

அருணோதயாக் கல்லூரியில் — காங்கேசன்துறை, அம்பனை, அளவெட்டி, மல்லாகம் கொத்தணிகள்.

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் — இளவாலை, தெல்லிப்பளை, பண்டத்தரிப்பு கொத்தணிகள்.

சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியில் — வட்டுக்கோட்டை, சுழிபுரம், காரைநகர் கொத்தணிகள்.

## கருத்தரங்கு

யாழ். பிரதான வீதி திருமறைக் கலா மன்றக் கேட்போர் கூடத்தில் நாளை மறுதினம் [செவ்வாய்] மாலை 5 மணிக்கு ''பண்பாடு'' என்னும் பொருளில் கருத்தரங்கு நடைபெறும். [ஓ-51]

## அதிபர்கள் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 26

பண்டத்தரிப்பு கல்விக் கோட்ட அதிபர்கள் கூட்டம் நாளை (திங்கட்கிழமை] பிற்பகல் 1 மணிக்கு பண்டத்தரிப்பு மகளிர் பாடசாலையில் நடைபெறும்.

தொண்டர் ஆசிரியர்கள் பற்றிய அறிக்கை சம்பந்தமாகவும் பாடசாலைக் கல்வி அபிவிருத்திக் கழக மூலமாக தெரிவு செய்யப்படும் ஆசிரியர் பற்றியும் அன்றையதினம் அறிவுறுத்தல்கள் வழங்கப்படும் என பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. ப. சண்முகராசா தெரிவித்துள்ளார். (ஓ)

## குளத்தில் மூழ்கி மரணம்

தென்மராட்சி, ஜன. 26

குளத்தில் குளிக்கச் சென்ற வயோதிபர் ஒருவர் மூன்று நாட்களின்பின் சடலமாக மீட்கப்பட்டார். இச் சம்பவம் கடந்த புதன்கிழமை சாவகச்சேரி வனுவில் பகுதியில் இடம் பெற்றது.

இப்பகுதியைச் சேர்ந்த எஸ். செல்லத்துரை (வயது 85) என்பவரே பலியானவராவார். [த-117]

## வேலணை மாணவருக்கு வகுப்புகள்

யாழ்ப்பாணம், ஜன. 26

இடம்பெயர்ந்து வந்துள்ள — வேலணை சைவப்பிரகாச வித்தியாலய மாணவர்களுக்கு — நாளை முதல் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியிலுள்ள பட்டப்படிப்புகள் கல்லூரியில் பகல் நேர வகுப்புகள் நடைபெறும்.

இதுவரை இவர்கள் யாழ். வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் மாலை நேர வகுப்புகளில் பயின்று வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதீய ஜனதா கட்சியின் பாத யாத்திரை குழம்பியது!

## தரைமார்க்க முயற்சி கைவிடப்பட்டது

புதுடில்லி, ஜன. 20

பாரதீய ஜனதாக் கட்சியின் ஒற்றுமை யாத்திரை நேற்று ஜம்மு காஷ்மீர் நெடுஞ் சாலையில் தடைப்பட்டது. டாக்டர் முரளி மனோகர் ஜோஷியும் மற்றும் தலைவர்களும் நேற்று ஜம்முவில் இருந்து விமானம் மூலம் ஸ்ரீநகர் நோக்கிப் புறப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்திய குடியரசு தினமான இன்று 26 ஆம் திகதி காஷ்மீரின் தலைநகரான ஸ்ரீநகரில் இந்தியத் தேசியக் கொடியை ஏற்றுவது உறுதி என்று டாக்டர் முரளி மனோகர் ஜோஷி நேற்று மீண்டும் அறிவித்தார்.

ஜம்மு—காஷ்மீர் பகுதியில் ஏற்பட்டுள்ள மோசமான காலநிலை, மண்சரிவு ஆகியவையே இந்த ஒற்றுமை யாத்திரை தடைப்படக் காரணமாக அமைந்தன என்று இந்திய வானொலி நேற்றுத் தெரிவித்தது ஆனால் முஸ்லிம் பிரிவினை வாதிகளின் பயமுறுத்தல் காரணமாகவே யாத்திரை தடைப்பட்டதாக பி. பி. ஸி. தெரிவித்தது.

ஒற்றுமை யாத்திரை ஸ்ரீநகருக்குள் நுழைந்தால் யாத்திரையின் செல்வோர்மீது தாக்குதல் நடத்தப்படும் என்று முஸ்லிம் பிரிவினை வாதிகள் எச்சரித்திருந்தனர்.

இந்து கலாசாரத்தின் கீழ் இந்தியாவில் ஒற்றுமை ஏற்பட வேண்டும் என்று கோரி இந்த யாத்திரையை கன்னியாகுமரியில் இருந்து ஸ்ரீநகர் வரை தரை மார்க்கமாக பாரதீய ஜனதாக் கட்சி ஆரம்பித்திருந்தது தெரிந்ததே.

நேற்றுக் காலை ஜம்முவில் இருந்து எட்டு பஸ்களில் புறப்பட்ட பாரதீய ஜனதாக் கட்சித் தொண்டர்கள் காஷ்மீர் பள்ளத்தாக்கின் மலைப் பாதை வழியாக உதம்பூர் சென்றடைந்தனர்.

உதம்பூரில் வைத்தே இவர்களது யாத்திரை தடைப்பட்டது.

டாக்டர் முரளி மனோகர் ஜோஷியும் மற்றும் தலைவர்களும் உதம்பூரில் இருந்து ஹெலிக்கொப்டரில் மீண்டும் ஜம்முவுக்கு அழைத்து வரப்பட்டனர் என்றும், ஜம்முவில் இருந்து தனிப்பட்ட விமானத்தில் பின்பு ஸ்ரீநகர் புறப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் பாரதீய ஜனதாக் கட்சியின் மற்றும் ஒரு தலைவரான எல். கே. அத்வானி நேற்று வெளியிட்ட ஓர் அறிவிப்பில், ஒற்றுமை யாத்திரையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் திட்டமிட்டவாறு இந்த யாத்திரை தொடர்ந்தால் டாக்டர் முரளி மனோகர் ஜோஷிக்கு உயிராபத்து ஏற்பட்டிருக்கலாம் என்றும் தெரிவித்தார்.

டாக்டர் முரளி மனோகர் ஜோஷி உதம்பூரில் வைத்து கைது செய்யப்பட்டதாக முதலில் வெளியான தகவல் ஒன்றை பின்னர் பொலீஸார் மறுத்திருந்தனர்.

இதற்கிடையில் ஸ்ரீநகரில் நேற்று இரண்டாவது நாளாக ஊரடங்கு அமுலில் இருந்தது. முஸ்லிம் பிரிவினைவாதிகளுக்கும் பொலீஸாருக்கும் இடையில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச் சமர் ஒன்றில் ஒருவர் கொல்லப்பட்டார். [இ]

## நிறைவேற்று அதிகாரம் கொண்ட புதிய அதிபர்கள்

### அமைச்சு அங்கீகாரம் கோரப்பட்டுள்ளது

யாழ்ப்பாண மாவட்டத்தில் கொத்தணி முறையை மாற்றி அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இது சம்பந்தமான ஆலோசனைகள் கல்வி அமைச்சின் அங்கீகாரத்திற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கொத்தணி அதிபர்களுக்குப் பதிலாக நிறைவேற்று அதிகாரம் உள்ள அதிபர்களின் கீழ் பாடசாலைகளை அணிகளாகப் பிரிப்பதே புதிய திட்டமாகும்.

தென்னிலங்கையில் பல மாவட்டங்களில் கொத்தணி முறை நீக்கப்பட்டு புதிய திட்டங்கள் அமுல் செய்யப்பட்டு வருகின்றன.

யாழ். மாவட்டத்தில் தற்போதுள்ள 56 கொத்தணிகளையும் பிரித்து 25 நிறைவேற்று அதிகாரம் கொண்ட அதிபர்களின் கீழ் கொண்டுவர புதிய திட்டம் வகை செய்கிறது.

தற்போதுள்ள கொத்தணி அதிபர் முறையில் உள்ள பல்வேறு குறைபாடுகள் குறித்து தீர்க்கமாக ஆய்வு செய்யப்பட்ட பின்னரே புதிய திட்டம் தயாரிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலைகளில் வளப் பங்கீடு என்ற முக்கிய குறிக்கோளை கொத்தணி அமைப்பு முறை இது வரை சரியாக நிறைவேற்றவில்லை என்றும் கட்டிக் காட்டப்பட்டுள்ளது. [அ-5]

## ராஜதந்திர பாஸ்போர்ட் அத்துலத் முதலி இழந்தார்

கொழும்பு, ஜன. 26

முன்னாள் அமைச்சரும், ஐ. தே. க. அதிருப்தியாளர் குழுவின் முக்கிய பிரமுகருமான லலித் அத்துலத் முதலி மற்றும் அவரது மனைவி ஆகியோருக்கு வழங்கப்பட்டிருந்த ராஜதந்திர பாஸ்போர்ட்டை ரத்துச் செய்யுமாறு குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பணித்துள்ளார்.

லலித் அத்துலத் முதலி அமைச்சர் பதவியிலிருந்து விலகிய பின்னர், அவருக்கு வழங்கப்பட்டிருந்த ராஜதந்திர பாஸ்போர்ட்டை கையளிக்குமாறு குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் அவரிடம் பலமுறை வேண்டுகோள் விடுத்திருந்தார் என்றும்—

ஆனால் அவர் அதைக் கையளிக்கத் தவறியதை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

பாஸ்போர்ட்டுகளை தாம் எங்கேயோ தவறுதலாக வைத்துவிட்டதாக திரு. அத்துலத் முதலி கட்டுப்பாட்டாளருக்கு அறிவித்திருந்தாராம். [உ-த]

## வருடாந்த கூட்டம்

கொழும்புத்துறை, ஜன. 26

கொழும்புத்துறை கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஆறாவது ஆண்டு பொதுக் கூட்டம் துரையப்பா வித்தியாலயத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு சங்கத் தலைவர் திரு. செ. கந்தசாமி தலைமையில் நடைபெறும். [உ-30]

## நோயாளருடன் கப்பல் புறப்பட்டது

யாழ்ப்பாணம், ஜன. 26

கொழும்பில் சிகிச்சை பெறுவதற்காக செல்லும் நோயாளர்களை ஏற்றிக்கொண்டு குமண கப்பல் நேற்று மாலை 3 மணிக்கு பருத்தித்துறை துறைமுகத்தில் இருந்து புறப்பட்டது.

இக்கப்பலில் 41 நோயாளிகளும், அவர்களின் உதவியாளர்களும் மற்றும் நோயாளரைப் பராமரிப்பதற்காக ஒரு டாக்டர், ஒரு பெண் தாதி ஆகியோரும் செல்கின்றனர். [உ-15-5]

## இன்று இறுதியாட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 26

அமரர் ராஜன், விக்ரம் ஆகியோர் நினைவாக கொக்குவில் வளர்மதி விளையாட்டுக் கழகம் நடத்தும்— அழைக்கப்பட்ட அணிகளுக்கிடையேயான முத்தரப்பு கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டம் இன்று காலை 8.30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகும்.

நாற்பது ஓவர்களைக் கொண்ட இந்த இறுதியாட்டத்தில் யாழ்ப்பாணம் ஜொலி ஸ்ரார்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணி மோதும்.

நேற்று நடைபெற்ற ஓர் ஆட்டத்தில் ஷப்றா அணியை கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழக அணி 4 விக்கெட்டுக்களால் தோற்கடித்தது. [உ]


# கிளிநொச்சியில்

தரமான கல்வியைப் பெற

## றோயல் கல்வி நிலையம்

உதயநகர்

★ ஆண்டு 5 முதல் ஆண்டு 13 வரையான வகுப்புகள்

★ ஆண்டு 5 விசேட புலமைப் பரிசில் பரீட்சை வகுப்புகள்

★ SPOKEN ENGLISH வகுப்புகள்

சகல பாடங்களும் சிறந்த அனுபவமிக்க ஆசிரியர்களால் போதிக்கப்படும்.

[சி/1364] — நிர்வாகி


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 26-1-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## மாணவர் கல்வி பயில்வதற்கு இரவு வேளையில் மின் ஒளி

யாழ்ப்பாணம், ஜன. 26

கோப்பாய் உதவி அரச அதிபர் பிரிவில் உள்ள மாணவர்கள் இரவு நேரத்தில் கல்வி பயிலுவதற்கு வசதியாக, நேற்று முதல் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி வகுப்பறைகளுக்கு ஜெனரேட்டர் மூலம் மின்சாரம் வழங்கப்பட்டிருக்கிறது.

மாலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை கல்லூரியின் வகுப்பறைகளுக்கு ஜெனரேட்டர் மூலம் மின்சாரம் வழங்கப்படும் என்றும்—

அந்தப் பிரதேச மாணவர்கள் இரவு வேளைகளில் இந்த வகுப்பறைகளில் கூடி — மின்னொளியில் — கல்வி கற்கலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் திட்டத்தை இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளையின் உதவியுடன் செஞ்சிலுவைச் சங்க கோப்பாய் உப கிளை செயற்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது. இத்திட்டம் நேற்று மாலை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

## சிங்களக் குடியேற்றத்துக்கு வவுனியாவில் ரூ. 300 கோடி!

வவுனியாவில் குடியேற்ற நடவடிக்கைகள் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்காக 300 கோடி ரூபா செலவிலான திட்டம் ஒன்றைத் தீட்டி அரசாங்கம் செயற்படுத்தி வருவதாக கொழும்புத் தகவல் ஒன்று தெரிவிக்கிறது.

எல்லைப்புறமான வவுனியாவில், சிங்களக் குடியேற்றங்களை துரித கதியில் ஏற்படுத்துவதற்காகவே அரசு, இவ்வளவு பெரிய திட்டத்தைத் தீட்டி அதனை செயற்படுத்தி வருவதாகவும் சுட்டிக் காட்டப்பட்டது.

குடியேற்றத் திட்டத்தை துரிதமாக செயற்படுத்தும் முயற்சியின் ஒரு கட்டமாக நேற்று வவுனியாவில் வீடமைப்பு, நிர்மாணத்துறை அமைச்சின் நடமாடும் செயலகம் செயற்பட்டது.

குடியேறும் சிங்களவர்களை ஊக்குவிக்கவும், அவர்களின் பிரச்சினைகளை உடனுக்குடன் தீர்க்கவும் வசதியாக, இதேபோன்று பல்வேறு அமைச்சுகளின் நடமாடும் செயலகங்களை இரு வாரங்களுக்கு ஒருமுறை வவுனியாவில் நடத்தவும் திட்டமிடப்பட்டிருக்கிறதாம்.

குடியேறுவோர் வசதிக்காக ஒன்றரைக்கோடி ரூபா செலவில் குடிதண்ணீர் விநியோகத் திட்டமும் வவுனியாவில் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

குடியேறும் ஒவ்வொரு குடும்பங்களுக்கும் வீடமைப்புக் கடன் என்ற பெயரில் 15 ஆயிரம் ரூபா வழங்கப்படும். இந்த வகையில் ஆயிரத்து 400 குடும்பங்களுக்கு உதவி அளிக்கப்பட்டிருக்கிறது. (உ)

## பாதுகாப்பு அதிகாரிகளும் விசாரணைக்கு உள்ளாவர்

புதுடில்லி, ஜன. 26

ராஜீவ் காந்தியின் தமிழக வருகையின் போது அவருக்கு அளிக்கப்பட்டிருந்த பாதுகாப்பு ஏற்பாடுகளில் குறைபாடு இருந்ததா என்பதை ஆராய நியமிக்கப்பட்ட நீதிபதி வர்மா தலைமையிலான தனிநபர் கமிஷன் காவல் துறை மற்றும் பாதுகாப்புத் துறை அதிகாரிகளைக் குறுக்கு விசாரணை செய்வதென்று நேற்று முடிவு செய்தது.

இதற்கு முன்னோடியாக ராஜீவ் காந்தி கொலை தொடர்பான தஸ்தாவேஜுக்களை இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் தன்னிடம் ஒப்படைக்கும்படி மத்திய அரசுக்கும் தமிழ்நாடு அரசுக்கும் புதுடில்லி காவல் துறைக்கும் கமிஷன் உத்தரவிட்டுள்ளது.

தஸ்தாவேஜுக்கள்கிடைத்த பின்பே குறுக்கு விசாரணை ஆரம்பமாகும் என்று தெரிவிக்கப்படுகிறது.

அதேசமயம் கடந்த ஆண்டு மே மாதம் 21 ஆம் திகதி ஸ்ரீபெரும்புதூரில் ராஜீவ் காந்தி உரை நிகழ்த்த இருந்த மேடையை அமைத்தவர்கள், அக்கூட்டத்துக்கு வெளிச்ச வசதி செய்தவர்கள், பாதுகாப்புக்காக தடுப்புக்களை அமைத்தவர்கள் இம் மாதம் 27 ஆம் திகதி கமிஷனால் குறுக்கு விசாரணை செய்யப்படுவர்.

## மரண அறிவித்தல்

### திருமதி சபாபதி மங்கையர்க்கரசி

காங்கேசன்துறையில் வசித்தவரும் யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகக் கொண்டவருமான காலஞ்சென்ற ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர் திரு. மு. சபாபதியின் அன்பு மனைவி மங்கையர்க்கரசி 25-01-92 இல் [சனிக்கிழமை] காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி வள்ளிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகளும் திருமதி ம. சுதாராஜினி, திரு. ச. நாகேந்திரகுமார் [பிரான்ஸ்], திரு. ச. சுதாஸ்கரன் [பிரான்ஸ்], திருமதி இ. சிவரஞ்சினி [சிங்கப்பூர்], திருமதி பி. ஜெயராஜினி [மாத்தளை], ச. உதயகரன், ச. இராஜகரன் [நடேஸ்வராக் கல்லூரி] ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. கி. மகாலிங்கம் [கிராம சேவை அலுவலர், கொட்டடி, நாவாந்துறை], திரு. இரவீந்திரன் [பொறியியலாளர் சிங்கப்பூர்], திரு. ந. பிறேம்ராஜ் [பொறியியலாளர், அபுதாபி] ஆகியோரின் அன்பு மாமியாரும். திரு. ந. இரத்தினம், காலஞ்சென்ற இராசையா, திருமதி பொ. புவனேஸ்வரி, திரு. ந. இராசேந்திரம், திருமதி இ. கமலநாயகி, திரு. அருணகிரிநாதன் [பிரான்ஸ்] ஆகியோரின் சகோதரியும், செல்வி ம. சுரேகா, ம. சுலக்ஷன், ம. சுலக்ஷினி, செல்வன் பி. அருண் ஆகியோரின் பேத்தியுமாவார்.

அன்னாரது பூதவுடல் இல. 224 நாவலர் றோட் யாழ்ப்பாணம் இல்லத்திலிருந்து தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு இன்று 26-01-92 ஆம் திகதி பி. ப 3.00 மணியளவில் எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
மகாலிங்கம்
[மருமகன்]

224, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்.

[19480]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org